**O.S.No. 308/2019**

**dated 07.07.2025**

**வா.சா.1 சங்கரகோமதி**

**5ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் சிவகாசி சாட்சியாபுரத்தில் எத்தனை ஆண்டுகளாக குடியிருந்து வருகிறேன் என்றால் 15 அல்லது 17 ஆண்டுகளாக குடியிருந்து வருகிறேன். 2ம் வாதி தேவகியை கரிவலம்வந்தநல்லூரில் திருமணம் செய்து கொடுத்து அங்கு குடியிருந்து வருகிறோர் என்றால் சரிதான். மேற்படி 2ம் வாதிக்கு திருமணம் ஆகி 10 ஆண்டுகள் இருக்கும். 1ம் வாதி ஸ்ரீவில்லிபுத்துார் அருகில் உள்ள மம்சாபுரம் கிராமத்தில் திருமணம் முடித்து அங்கு இருக்கிறார் என்றால் சரிதான். 1ம் வாதி திருமணம் செய்துகொடுத்து 25 ஆண்டுகள் ஆகிறது. நானும் எனது சகோதரிகளும் திருமணம் ஆனதில் இருந்து அவரவர் கணவர் வீட்டில் வாழ்ந்து வருகிறோம் என்றால் சரிதான். 2ம் வாதி தேவகி கரிவலம்வந்தநல்லூரிலும், 1ம் வாதி மம்சாபுரத்தில் குடியிருந்து வந்தாலும் ஆனால் சிவகாசி சாட்சியாபுரத்தில் குடியிருந்து வருவதாக பிராது தாக்கல் செய்துள்ளேன் என்றால் வழக்கு தாக்கல் செய்த சமயம் மேற்படியார்கள் சாட்சியாபுரத்தில் குடியிருந்து வந்தார்கள். பிராதில் எங்களது கதவு எண், தெருவை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வாடகை வீட்டில் குடியிருந்தேன். 1, 2 வாதிகளின் விலாசத்தை நான் தவறுதலாக பிராதில் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது தாத்தா பெயர் சின்னசாமி நாடார் ஆகும். தாத்தாவின் தகப்பனார் குத்தாலிங்க நாடாருக்கு தாவா சொத்துக்கள் பூர்வீகமாக பாத்தியப்பட்டதற்கு ஆவணங்களை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். என்ன பத்திரம் என்று என்னால் சொல்ல தெரியவில்லை. எனது தாத்தா சின்னசாமி நாடாருக்கு அவரது தகப்பனார் எழுதி கொடுத்த ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்துக்கள் எனது தாத்தாவிற்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது கிடையாது என்றாலும் எனது தாத்தாவுக்கும், அவரது சகோதரர்களுக்கும்பொதுவாக பாத்தியப்பட்டது என்றாலும் சரியல்ல. வா.சா.1 பாகப்பிரிவினை ஆவணத்தில் மேற்படியார்கள் பிரிவினை செய்து கொண்டதில் பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்ற வாசகம் கூறவில்லை, 1 முதல் 3 தபசில் சொத்துக்கள் பொதுவாக பாத்தியப்பட்டது என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

வா.சா.1 ன் படி 3ம் தபசிலை எனது தாத்தாவிற்கு கொடுத்துள்ளனர் என்றால் சரிதான். மேற்படி வா.சா–ஆ.1ன் 3ம் தபசிலில் எனது தாத்தா சின்னசாமி நாடாருக்கு தாவா சொத்தையும் சேர்த்து மொத்தம் 5 அயிட்ட சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்தை தவிர்த்து மற்ற 4 அயிட்ட சொத்துக்களும் எங்கள் குடும்பத்தில் உள்ளதா என்றால் இருக்கிறது. எனது தாத்தா மூலம் எனது தகப்பனாருக்கு கிடைத்த வீடு தாவா கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். தாவாசொத்தை நீக்கி மற்ற 4 அயிட்ட சொத்தையும வீட்டையும் வழக்கில் நாங்கள் சேர்த்து பாகம் கோரவில்லை என்றால் சரிதான். வாசுதேவநல்லூர் கிராமத்தில் எனது தகப்பனார் குடியிருந்து வரும் வீடு நாடார் 1ம் தெருவாக இருந்து தற்போது காமராஜர் 1ம் தெருவாக இருந்து வருகிறது என்றால் சரிதான். எனது திருமணத்திற்கு முன்பு மேற்படி நாடார் 1ம் தெருவில் உள்ள வீட்டில் எனது தகப்பனாருடன் குடியிருந்தோம் என்றால் சரிதான். அது எனது தாத்தா மூலம் கிடைத்த வீடு ஆகும். எனது தாத்தாவின் தகப்பனார் குத்தாலிங்க நாடார் எப்போது இறந்தார் என்று தெரியாது. வா.சா.1 ஆவணம் 1955ம் ஆண்டிலேயே பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். எனது தாத்தா சின்னசாமி நாடார் 2018ம் ஆண்டு இறந்தார் என்றால் சரிதான். காமராஜர் 1ம் தெருவில் அய்யாத்துரை நாடார் மக்கள் தாமரைச்செல்வி, தேவகி, சங்கரகோமதி, 1ம் பிரதிவாதி அய்யாத்துரை நாங்கள் தான் என்றால் சரிதான். வேறு நபர்கள் அந்த தெருவில் கிடையாது என்றால் சரிதான். 5ம் பிரதிவாதியின் எதிர்வழக்குரை விவரங்களை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்துள்ளேன். எனது தாயாரின் பெயர் பாலம்மாள். நாங்களும் 2ம் பிரதிவாதி மைனர்களாக இருக்கும் போது எனது தாயாரை கார்டியனாக காண்பித்து எனது தாத்தா சின்னசாமி நாடார் தாவா சொத்தில் கீழ்கடைசி 32 சென்டை பொறுத்து கிரையம் கொடுத்துள்ளார் என்றால் இல்லை. 5ம் எதிர்வழக்குரையில் மேற்படி விவரத்தை கூறியுள்ளார் என்றால் கூறியுள்ளார். மேற்படி விவரத்தை மறுத்து பதில் வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவாசொத்தில் கீழ் கடைசி 32 சென்டை எனது தாயாரை கார்டியனாக காண்பித்து எனது தாத்தா கிரையம் கொடுத்ததை இவ்வழக்கிற்காக இல்லை என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மேற்படி 32 செண்டை பொறுத்து 21.07.1999 ல் நாங்கள் வாதிகள் அனைவரும் எனது சகோதரர் 2ம் பிரதிவாதியிடம் ரூ. 16,178/-யை பெற்றுக்கொண்டு பாக பாத்திய விடுதலை ஆவணம் பிறப்பித்து கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. மேற்படி விவரத்தை 5ம் பிரதிவாதி எதிர்வழக்குரையில் கூறியுள்ளார் என்றால் சரிதான். அதை மறுத்து பதில்வழக்குரை தாக்கல செய்யவில்லை என்றால் சரிதான். மேற்சொன்ன பாக பாத்திய விடுதலை ஆவணத்தை எனது சகோதரருக்கு வாதிகள் சேர்த்து பிறப்பித்து கொடுத்தோம் என்றாலும் ,அதை வழக்கிற்காக மறைக்கிறோம் என்றால் சரியல்ல. மேற்படி கிரைய ஆவணத்தையும், பாக பாத்தியவிடுதலை ஆவணத்தை வேண்டுமென்றே மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்சொன்ன 32 செண்ட்டையும் சேர்த்து தாவா சொத்து அனைத்தையும் 2ம் பிரதிவாதிக்கு எனது தாத்தா செட்டில்மெண்ட் ஆவணம் பிறப்பித்து கொடுத்துள்ளார் என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. தாவா சொத்து முழுவதையும் ஆதி பாத்தியஸ்தரான எனது தாத்தா 2ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் கொடுத்துவிட்டதால் எங்களுக்கு பாகம் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நாங்கள் அவ்வாறு எதுவும் எழுதி கொடுக்கவில்லை. 2ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் நகல் எதுவும் நாங்கள் எடுத்து பார்க்கவில்லை. 1, 2 பிரதிவாதிகள் 5ம் பிரதிவாதி தாவா சொத்தில் பயிரிடப்பட்டிருந்த நெற்பயிரை தீ வைத்து அழிவு செய்ததால் மேற்படியார்களின் மீது சிவகிரி குற்றவியல் நீதிமன்றத்தில் குற்றவழக்கு நிலுவையில் உள்ளது என்றால் அதுகுறித்து தெரியாது. நாங்கள் தாவா சொத்தை நாங்கள் பொதுவாக அனுபவம்செய்து வரும் ஆவணத்தினை தாக்கல செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 ஆவணம் புல எண்.378/1 ஜி யில் 2 ½ ஏரில் உள்ள கூட்டு பட்டா என்றால் சரிதான். மேற்படி பட்டாவில் உள்ள கிணற்றில் எனது தாத்தாவிற்கு 4 ல் 1 பங்கு ஆகும். மேற்படி கிணற்றில் உள்ள பங்காளி பெயர் என்ன என்றால் எங்கள் தாத்தாமார்கள் 3 பேர் தான் பங்காளிகள் வேறு யாரும் கிடையாது. எனது தாத்தாவிற்கு பின்பு எனது தகப்பனார் பெயரில் வருவாய் துறை ஆவணங்களில் இறங்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.5 கூட்டுபட்டாவில் 7 வது நபராக 5ம் பிரதிவாதி அருணாச்சலம் பெயர் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ல் கூட்டுபட்டாவில் 6 வது நபராக 4ம் பிரதிவாதி பெயர் சேர்க்கப்பட்டுள்ளது

என்றால் சரிதான். வா.சா.ஆ–5 ல் 1 வது நபராக உள்ள காளி என்பவர் யார் என்று தெரியாது. எனது தாத்தா இருக்கும்போது எனது சகோதரர் 2 ம் பிரதிவாதி பெயரில் தாவாசொத்துக்களுக்கு பட்டா ஏற்பட்டுவிட்டது என்றால் தெரியாது. தாவா சொத்தில் உள்ள கிணற்றிக்கு தான் 10(1) அடங்கலை தாக்கல் செய்துள்ளேன், மற்ற இடங்களுக்கு 10(1) அடங்கல் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்த சமயமே 5 ம் பிரதிவாதி பெயரில் பட்டா ஏற்பட்டிருந்தது என்றால் அதுகுறித்து தெரியாது. விவசாய மின் இணைப்பிற்கு அரசாங்கம் மின் கட்டண வரி எதுவும்வாங்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்திற்கு நானோ எனது தகப்பனாரோ தீர்வை செலுத்தவில்லை என்றால் சரிதான். எனது தாத்தாவோடு, நானும், எனது தகப்பனாரும் 2 ம் பிரதிவாதியும் கூட்டாக தாவா சொத்தை அனுபவம் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது தாத்தா 2 ம் பிரதிவாதிக்கு கொடுத்த செட்டில்மெண்ட் நகலை வா.சா.ஆ.2 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா–ஆ.2 ல் பக்கம் 7 ல் சாட்சி கையொப்பம் செய்துள்ளது எனது தகப்பனார் தான். வா.சா.ஆ–2 பிறப்பிக்கும் போதே எனது தகப்பனார் எங்களிடம் சொல்லியுள்ளார் என்றால் அதுகுறித்து சொல்லவில்லை. வா.சா.ஆ.2 பிறப்பிக்கும் போதே செட்டில்மெண்ட் ஆவணம் குறித்து எங்களுக்கு தெரியும் என்றாலும் தெரியாது என வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. எங்களுக்கு விரோதமாக எனது தகப்பனார் எதுவும் செய்யமாட்டார் என்றால் சரிதான். இன்றும் எனது தகப்பனார் சகோதரருடன் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வோம் என்றால் சரிதான். எங்களது வீட்டு நிகழ்ச்சிகளுக்கும் எனது சகோதரரும், தகப்பனாரும் வருவார் என்றால் சரிதான். எனது தாத்தா 2 ம் பிரதிவாதிக்கு வா.சா.ஆ.2 செட்டில்மெண்ட் ஆவணம் பிறப்பித்துகொடுப்பதற்கு முழு உரிமை உண்டு என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 குறித்து தெரியாது என்று கூறுவது தான் சரி. வா.சா.ஆ.2 ஆவணம் வழக்குரையில் மோசடியான உற்பத்தி செய்து கொண்டுள்ளது என்று கூறுவது தவறு. வழக்கிற்கு முன்னர் வழக்கறிஞர் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால் சரிதான். 4 ம் பிரதிவாதியிடம் இருந்து 5 ம் பிரதிவாதி கிரையம் பெற்ற ஒரு மாத காலத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். 2014 ம் 4 ம் பிரதிவாதி கிரையம் பெற்று அனுபவம் செய்து வந்தார், அதன்பிறகு 5 ம் பிரதிவாதி கிரையம் பெற்று அனுபவம்

செய்து வருகீறார் என்றால் சரிதான். முதன்முதலாக நாங்கள் யாரிடம் பாகம் கோரினோம் என்றால் எனது தாத்தா உயிருடன் உள்ளபோதே தாவா சொத்தில் பங்கு கேட்டோம். மேற்படி பங்கு கேட்ட விவரத்தினை பிராதில் கூறவில்லை என்றால் சரிதான். எனது வழக்குரையில் 2019 ல் மே மாதம் பாகம் கேட்டோம் என்று கூறியுள்ளோம். நாங்கள் பாகம் கேட்டதற்கு எனது தகப்பனார் ஏற்கனவே செட்டில்மெண்ட் தாத்தா எழுதிகொடுத்துவிட்டார் அதனால் பங்குகிடையாது என்று கூறினார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 செட்டில்மெண்ட் ஆவணத்தை கேள்வி கேட்பதற்கு சட்டபடியான உரிமை எங்களுக்கு கிடையாது என்றால் சரியல்ல. பங்கு கேட்கும் போது எனது தாத்தா பங்கு உண்டு என கூறினார். வயதான காலத்தில் எனது தாத்தாவை தொந்தரவு செய்ய கூடாது என நாங்கள் வலியுறுத்தி கேட்கவில்லை. 2 ம் பிரதிவாதி 4 ம் பிரதிவாதிக்கு கொடுத்த கிரையம் குறித்து எங்களுக்கு தெரியாது. எனது தாத்தா 2 ம் பிரதிவாதிக்கு கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் சட்டப்படி செல்லக்கூடியது என்றாலும், அதை அனுசரித்து கொடுத்த 4 ம் பிரதிவாதி பெற்ற கிரையமும், 5 ம் பிரதிவாதி பெற்ற கிரையமும் செல்லக்கூடியது என்றாலும் சரியல்ல. மேற்படி ஆவணங்கள் செல்லாது என கேள்வி கேட்பதற்கு எவ்வித உரிமையும் வாதிகளுக்கு கிடையாது என்றால் சரியல்ல. எனது தந்தை மற்றும் 1, 2 பிரதிவாதிகள் தூண்டுதலின் பேரில் பணம் பறிக்கும் நோக்கில் இவ்வழக்கை தாக்கல்செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நானோ, எனது சகோதரிகளோ 1 ம் பிரதிவாதியோ தாவாசொத்தை சின்னசாமி நாடாருடன் சேர்த்து கூட்டாக அனுபவம் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது தாத்தா 1984 ஆண்டிலேயே கிரையம் கொடுத்த 32 செண்ட்டையும் சேர்த்து தவறுதலாக தாவா சொத்து முழுவதையும் வா.சா–ஆ.2 மூலம் பிறப்பித்து கொடுத்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. வா.சா–ஆ.2,3,4 கிரைய ஆவணங்கள் உண்மையான ஆவணங்கள் என்றாலும் வா.சா–ஆ 2 ஆவணமும் எனது தாத்தா பிறப்பித்து கொடுத்து என்றாலும், மேற்படி ஆவணங்கள் சட்டப்படி செல்லக்கூடியது என்றாலும் சரியல்ல. மேற்படி ஆவணங்களின் அடிப்படையில் எனது சகோதரரும், அதன்பின்னர் 4, 5 பிரதிவாதிகள் அனுபவம்செய்து வந்தனர் என்றால் சரியல்ல. 1984 லேயே பிறப்பித்துகொடுத்த கிரைய ஆவணத்தையும், நாங்கள் 1999 ல் நாங்கள் எங்கள் சகோதரருக்கு பிறப்பித்துகொடுத்த பாக பிரிவினை ஆவணத்தையும் மறைத்து

இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. என்னுடைய வழக்கு பொய்யானது என்றாலும் 5ம் பிரதிவாதியின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

4ம் பிரதிவாதி தரப்பில் ஆஜர் இல்லை, குறுக்கு விசாரணை இல்லை.